Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 203/2024 PW-4**

Name : ராஜீ
Father / Husband name : சின்னையா
Village : கீழ்மாவிலங்கை
Age : 34
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 07.01.2026

Accused 1, 2 present. Both side counsel present.

<u>முதல் விசாரணை</u>

நான் டிரைவர் வேலை செய்கிறேன். சாட்சி அபரஞ்சி என்பவரை எனக்கு தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரிலுள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. 01.02.2022 அன்று காலை 9 மணியளவில் எங்கள் ஊரிலுள்ள மாரியம்மன்கோவில் நான் இருந்தபோது வெள்ளிமேடுபேட்டை காவல் நிலைய போலிசார் வந்து லட்சுமணனின் அக்கா மற்றும் லட்சுமணனை கிருஷ்ணமூர்த்தி அடித்தாரா என்று விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது 01.02.2022 ந்தேதி மதியம் 01.30 மணிக்கு நீங்களும் உங்கள் ஊரை சேர்ந்த அபரஞ்சி ஆகியோர்கள் உங்கள் ஊரில் இருந்தபோது வெள்ளிமேடுபேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அங்கு வந்து இந்த வழக்கில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும் அந்த பார்வை மகசரில் நீங்களும் அபரஞ்சி சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையின்

உண்மையை சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிசார் சண்டை சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னை போலிசார் விசாரிக்கும்போது என்னுடன் அபரஞ்சி இருந்தரா என்றால் இருந்தார். அவரையும் போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அபரஞ்சியிடம் போலிசார் கையொப்பம் வாங்கினார்களா என்றால் தெரியாது. எங்களை தவிர்த்து பொதுமக்கள் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் 70, 80 நபர்கள் இருந்தார்கள். மேற்படி 70, 80 நபர்களை விசாரித்தால் போலிசார் என்ன விசாரித்தார் என்று தெரியும் என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.